பக்கங்கள் 17+5

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 10 வியாழக்கிழமை 26.09.2024 | அதிர்வு 56



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தியாக தீபத்தின் நினைவேந்தல்!

## தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சி

(எஸ்.நிதர்ஷன்)

ஈழத் தமிழ் மக்களுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா விரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று வியாழக்கிழமை தமிழர் தேசமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

02 ▶








# தியாக தீபத்தின் நினைவேந்தல்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம் – நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நடைபெற்றது.

தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, இரண்டு மாவீரர்களின் சகோதரியும் முன்னாள் போராளியுமான பெண்ணொருவர் பொதுச்சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து தியாக தீபத்தின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணா விரதம் இருந்த இடத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் இரண்டு தூக்குக் காவடிகள் நினைவிடத்துக்கு வந்திருந்ததுடன் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஊர்திப் பவனிகள் வந்திருந்தன.









# தியாகதீபம் திலீபனுக்கு மன்னாரில் அஞ்சலி

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

தியாக தீபம் திலீபனின் 37 வது நினைவேந்தல் நிகழ்வு இன்றைய தினம் வியாழக்கிழமை (26) காலை மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இன்று காலை 10.30 மணியளவில் மன்னாரில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது சுடர் ஏற்றப்பட்டு, மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மதத் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.









குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# கோர விபத்தில் தம்பதி மரணம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தில் தம்பதியர் உயிரிழந் துள்ளனர்.

மோட்டார் சைக்கிளும் வானும் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 38 வயதுடைய கணவ னும், அவரது 32 வயது மனைவியும் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலி ஸார் குறிப்பிடுள்ளனர்.



விபத்து தொடர்பில் வானின் சாரதி யைக் கைது செய்துள்ள அக்குரஸ்ஸ பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அர்ச்சுனாவின் பிணை இரத்து! ஒக். 10 வரை விளக்கமறியல்!!

(எஸ்.நிதர்ஷன்)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் முன்னாள் வைத்திய அத்தி யட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவை எதிர்வரும் ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

வைத்தியர்களைத் தொலைபேசியில் அச்சுறுத்தியமை, பேசித் தொந்தரவு செய்தமை உள்ளிட்ட காரணங்களுக் காக வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட வழக்குகள் இன்று சாவகச்சேரி நீதி மன்றத்தில் நீதிவான் அ.யூட்சன் தலை மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வைத்தியர் அர்ச்சுனா சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்களைச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும், நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்கத் தவறியமை, பிணை நிபந்தனைகளைச் மீறி செயற்பட்டமை காரணமாக அவரின் பிணை இரத்துச் செய்யப்பட்டு அவரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டது.

# இளம் பொலிஸாரைத் தவறான முறைக்கு உட்படுத்த முயன்ற பொலிஸ் பொறுப்பதிகாரி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தவறான முறைக்குட்படுத்த முயற்சி செய்த பொலிஸ் பொறுப்பதிகாரி மீது விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். காங்கேசன்துறை பொலிஸ் விசேட பிரிவின் பொறுப்பதிகாரி, அங்கு கடமை புரியும் 25 வயது மதிக்கத்தக்க பொலிஸ் உத்தியோகத்தரையே இவ்வாறு தவறான முறைக்கு உட்படுத்த முயற்சி செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த ஜுன் மாதம் 8ஆம் திகதி, காங்கேசன்துறை விசேட பொலிஸ் பிரிவில் கடமை புரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களை, அவர்களது பொறுப்பதிகாரி, சேந்தாங்குளம் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, அங்கு பொதுநபர்கள் சிலருடன் இணைந்து மதுபான விருந்தில் ஈடுபட்டுள்ளார்.

அதன்பின்னர், மதுபோதையில் இருந்த மேற்படி பொறுப்பதிகாரியை பொலிஸ் உத்தியோகத்தர் அழைத்துச் சென்று மல்லாகம் பகுதியில் உள்ள விடுதி அறையில் தங்க வைத்துவிட்டு வெளியே வர முயற்சித்துள்ளார். இதன்போது, பொறுப்பதிகாரி அறையை பூட்டிவிட்டு அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரைத் தவறான முறைக்கு உட்படுத்த முயற்சி செய்துள்ளார்.

இதனால், கோபமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர், பொறுப்பதிகாரியைத் தாக்கிவிட்டு வெளியே வந்துள்ளார். இந்த



விடயத்தை அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர், சக உத்தியோகத்தர்களுக்குத் தெரியப்படுத்தியவேளை சக உத்தியோகத்தர் ஒருவர் அந்தப் பிரச்சினையைப் பொலிஸ் விசேட பிரிவினர் முறைப்பாடுகள் செய்யும் புத்தகத்தில் பதிவு செய்தனர்.

இதையடுத்து மேற்படி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும் அந்த விசாரணை முறையாக நடைபெறாமல், பொறுப்பதிகாரியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணை எனக் கூறி பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை காலை 8 மணிக்கு அழைப்பதாகவும், அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு செல்வதற்குச் சற்றுத் தாமதமாகினால், விசாரணைகளை மேற்கொள்ளாமல் திருப்பி அனுப்பி இழுத்தடிப்பு செய்வதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன், குறித்த விடயத்தை பொலிஸ் விசேட பிரிவினர் முறைப்பாடுகள் செய்யும் புத்தகத்தில் எழுதிய பொலிஸ் உத்தியோகத்தரும், பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரும் பொறுப்பதிகாரியால் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் இன்று, தான் வேலையிலிருந்து விலகுகின்றார் என்று எழுதிவிட்டுச் சென்றுள்ளார் என அறியமுடிகின்றது.

# யாழில் பிக்மீ ஓட்டோ சாரதி மீது தாக்குதல்!




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் பிக்மீ ஓட்டோ சாரதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதிலும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் கருத்துத் தெரிவிக்கையில்,

“யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக நபர் ஒருவர், பிக்மீ அப்ஸ் மூலம் ஓட்டோ சேவையை நாடியபோது, அவ்விடத்துக்குச் சென்ற என்னை ஓட்டோ தரிப்பிடத்தில் தரித்து நின்ற ஓட்டோ சாரதி ஒருவர், சேவையை நாடிய நபரை என்னை ஏற்ற விடாது தடுத்து என் மீது தாக்குதல் நடத்தினார்.

என் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன். முறைப்பாட்டின் பிரகாரம் தாக்குதலாளியைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, அவர் முன்னாடி விசாரணைகளை மேற்கொண்ட பெண் பொலிஸ் உத்தியோகத்தர் என்னை ஏசி, தாக்குதலாளிக்குச் சார்பாக நடந்து கொண்டார்.

தாக்குதலாளியும், மேற்படி பெண் பொலிஸ் உத்தியோகத்தர் முன்பாக என்னை வெட்டுவேன் என மிரட்டினார்.

அதனால் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி விட்டேன். இது தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளேன்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நல்லாலோசனை

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் அநுர குமார திஸாநாயக்கவுக்கு யதார்த்த நிலைகள் சிலவற்றைச் சுட்டிக் காட்டி கடிதம்ஒன்றைவரைந்திருக்கின்றார் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தலைவர் வி.எஸ். சிவகரன். நீதியை நிலைநாட்ட புதிய நியதியை உருவாக்குங்கள் என்று அவர் கோரியிருக்கின்றார்.

இந்தக் கடிதத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் மூலக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) பற்றிய சில உண்மைகளை நாசூக்காகக் குறிப்பிட்டு ஓர் அடி கொடுக்கவும் அவர் தவறவில்லை.

"இடதுசாரித்துவ சிந்தனையின் அடிப்படையில், பாட்டாளி வர்க்கத்தின் சமூக சம நீதிக்கோட்பாட்டின் அடிப்படையை நோக்கு நிலையாகக் கொண்டு உருவாகிய கட்சி உங்களுடையது. இடைக் காலத்தில் இனவாத சகதிக்குள் சிக்குண்டு, பௌத்த தேசிய அடிப்படைவாத மகாவம்ச கருத்தியலை நடைமுறையாக்க முனைந்ததே இனத்துவ சமூகக் கட்டமைப்புக்குள் விரிசலை ஏற்படுத்தியது.'' - என்று சுட்டுகின்றார் சிவகரன்.


"ஏழு தசாப்தம் கடந்த இன முரண்பாட்டிற்கு தங்கள் காலத்தில் என்றாலும் தீர்வு காணப்படுவது அவசியம். அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட உரிமை மறுக்கப்பட்ட இனத்தின் ஏதிலி நிலையின் வலி என்ன என்பதை தாங்களும் உணர்ந்தவர் என்பதால் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.''- என்று தமிழர்களின் நிலையை அவர் புதிய ஜனாதிபதிக்கு மனதில் தைக்க உரைக்கின்றார்.

"இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இந்த நாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. பகைமையை பகைமையால் தணிக்க முடியாது. பகைமையை அன்பினாலேயே தணிக்க முடியும் எனும் புத்தரின் போதனையை நிலை நிறுத்துங்கள். தமிழர்களாகிய நாம் நல்லிணக்கத்தையே விரும்புகிறோம்.''- என்று நீதி உரைக்கின்றார் அவர்.

"பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களுடன் இதயசுத்தியாக மனம் திறந்து பூச்சிய நிலையில் இருந்து பேசுங்கள். நீதி என்பது பாதிக்கப்பட்டவனின் பக்கம் நிற்பதே. முதலாளித்துவ அடிப்படைவாத இனவாதத்தை முழுமையாக துறந்து விடுங்கள். கடந்த காலத்தில் தங்களின் இனவாத, இனக்குரோத வன்முறை வாத செயற்பாடுகளால் தமிழ் மக்கள் தங்கள் மீது அச்சத்திலும் வெறுப்பிலும் உள்ளனர். அதனால்தான் தமிழர் தாயகம் எங்கும் தங்களுக்கான ஆதரவு கிட்டவில்லை. இதுதான் ராஜபக்ஷ குடும்பத்திற்கும் நேர்ந்தது.

"எனவே கடந்த கால கசப்புணர்வுகளுக்காக தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருங்கள். தங்கள் கட்சியை கூட சிங்கள மக்கள் மன்னித்தமையால் தான் நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வர முடிந்திருக்கிறது. உங்கள் கடந்த காலத்தையும் நீங்கள் மீள் பார்வை செய்வது இன நல்லிணக்கத்திற்கு அவசியமாகும். அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த எந்த எல்லைக்கும் போகலாம். அதுதான் ஜனநாயகத்தின் உயர்ந்த நிலை. எனவே வாக்களிக்காதவருக்கும் வாய்ப்பளித்து வெற்றி கொள்வதே ஜனநாயக மரபியல் தத்துவமாகும். அதை நடைமுறைப்படுத்துவீர்கள் என நம்புகின்றோம். எதிர்பார்க்கின்றோம்.'' - என்று அவர் சுட்டுகின்றார்.

இந்த நல்லாலோசனை புதிய ஜனாதிபதியின் காதில் ஏறினால் நாட்டுக்கு நனமை. அது நடக்குமா?


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# கிழக்கு மாகாண ஆளுநர் இன்று கடமைகளைப் பொறுப்பேற்றார்!

(அஸ்ஹர் இப்றாஹிம், அபு அலா)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் இன்று (26) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் கந்தளாய் அக்ரபோதி வித்தியாலய பழைய மாண வனும், ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், தற்போதைய மட்டக்களப்பு, புணானை விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உபவேந்தரும், இரசாயனவியல் பேராசிரியருமாவார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் உயர திகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# ஒரு வைத்தியசாலைக் கழிவகற்றலுக்கு ஆண்டுக்கு 7 கோடிவரை ரூபா செலவு!

## தகவலறியும் சட்டம் மூலம் உறுதியானது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் கழிவு அகற்றல் செயற்பாட்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு 7 கோடி ரூபா வரையில் நிதி செலவிடப்படுகின்றமை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும் காணப்படும் பிரச்சி னைகளில் மிக முக்கிய பிரச்சனைகளில் ஒன்று கழிவு முகாமைத்துவம்.

இதில் யாழ். மாவட்டத்தின் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் காணப்படும் நிதிச் செலவீனம் மற்றும் கழிவு அகற்றும் பொறிமுறை, மாதாந்தம் உருவாகும் கழிவுகளின் அளவுகள் தொடர்பில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இதற்கு வைத்தியசாலைப் பணிப் பாளர் ஒப்பமிட்டு வழங்கிய பதிலில் இந்த தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனைய தரவுகளும் இணைக்கப்பட் டுள்ளன.

இதற்கமைய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தற்போது உக்கும் கழிவுகள், மருத்துவக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள், கண்ணாடிப் போத்தல் கழிவுகளுடன் சத்திர சிகிச் சைக் கழிவுகள், கழிவு நீர் என்பன உள் ளன என்று நிர்வாகம் தெரிவிக்கின் றது.

இவற்றில் மாதாந்தம் பொலித்தீன் மற்றும் கடதாசிக் கழிவுகள் தலா 10 தொடக்கம் 15 லோட்டும், கண்ணாடிப் போத்தல்கள் ஆயிரம் கிலோவும் சேர்வதோடு மருத்துவக் கழிவுகள் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிலோ சேர் கிறது என்று குறிப்பிடப்படுகின்றது.

இதேநேரம் கழிவு நீர் உள்ளிட்ட இந்தக் கழிவுகளை அகற்ற யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்கு கடந்த 2022 ஆம் ஆண்டு 4 கோடியே 50 லட்சம் ரூபாவும் 2023 ஆம் ஆண் டில் 7 கோடியே 5 ஆயிரத்து 692 ரூபாவும் செலவு ஏற்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் ஜுன் மாதம் வரையான முதல் அரையாண்டில் 2 கோடி ரூபா செலவு ஏற்பட்டுள்ளது என்று தகவல் அறியும் சட்டத்தில் வழங்கிய பதில் உறுதி செய்கின்றது.

இலங்கையின் 25 நிர்வாக மாவட் டங்களில் ஒன்றான யாழ். மாவட்டத்தில் காணப்படும்அரசவைத்தியசாலைகளில் ஒரு வைத்தியசாலைக்கு கழிவு அகற்றல் செயல்பாட்டுக்கு மட்டும் ஆண்டு தோறும் ஏற்படும் நிதிச் செலவே இது என்பது குறிப்பிடத்தக்கது.



# குரங்குகளின் தொல்லையால் சிரமத்தில் அம்பாறை மக்கள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்ட எல்லைப்புற கிராமங்களில் பகலில் குரங்குகளின் தொல்லையும், இரவில் யானைகளின் தொல்லையும் அதிகரித்துள்ளன.

இதனால் பிரதேசவாசிகளின் அன்றாட வாழ்க்கை சீரழிந்துள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள மகா ஓயா, பதியத்தலாவ, தெஹியத்தக்கண்டிய மற்றும் நாமல்ஓயா பிரதேசங்களில் இரவில் யானைகளின் தொல்லை முன்னரை விட அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் உயிர்கள் காவு கொள்ளப்படுவதுடன், குடியிருப்புகளுக்கும், உடமைகளுக்கும், பயிர்களுக்கும் சேதமாக்கப்பட்டு வருகின்றன.

பகலில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் வீடுகளில் காணப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் பாடசாலைக்கு பிள்ளைகள் கொண்டு செல்லும் உணவுப் பொருள்களையும் குரங்குகள் பலவந்தமாக பறித்துச் செல்கின்றன. இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு உணவுப் பொருள்களை கொண்டு செல்வதில் பலவிதமான சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பயிர் செய்யப்பட்டு அறுவடைக்கு தயாராகவுள்ள அனேகமான பழமரங்களையும் பழங்களையும் குரங்குகள் சேதப்படுத்துவதால் பொருளாதார ரீதியில் பலவழிகளிலும் நஷ்டமடைந்து வருகின்றனர் என்று பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



# மன்ராசி தமிழ் உயர்தரப் பாடசாலையில் குரங்குகள் வருகையால் மணவர் பாதிப்பு

(மஸ்கெலியா)

அக்கரபத்தனை, தலவாக்கலை, மன்ராசி தமிழ் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்கும் தமது பிள்ளைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்களும் பெருமளவான குரங்கு வருகையால் கடும் நெருக்கடிக்கும் பல்வேறு சிரமங்களுக்கும் ஆளாகி யுள்ளனர் என்று பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் பாடசாலை வளாகத்தில் இந்த குரங்கு கூட்டம் சுற் றித் திரிவதாகவும், பாடசாலை மாண வர்களது புத்தகப் பைகளில் உள்ள உணவு, தண்ணீர்போத்தல்களை எடுத்துச் செல்வதால் பாடசாலை மாணவர்கள் சிரமம் அடைவதாகவும் கூறு கின்றனர்.

குழந்தைகளின் பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலையில் கட்டப்படும் விளம்பரங்கள் போன்றவற்றை கிழித்து சேதப்படுத்துகின்றன என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பாடசாலையில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை வழங்குவதற்குப் பொறுப்பான வன பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எங்கள் பாடசாலையில் சுமார் 420 மாணவர்கள் படிக்கின்றனர். தரம் ஒன்று முதல் உயர் தரம் வரையான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பாட சாலையில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சி னையால் ஆசிரியர்கள், சிறுவர்கள் பல்வேறு சிரமங்களையும், அசௌக ரியங்களையும் எதிர்நோக்கி வரு கின்றனர்.

கூட்டம் கூட்டமாக வரும் குரங்கு களை கண்டு பயந்து ஓடுவதால் குழந் தைகள் தவறி விழுந்து காயமடையும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன.

சில சந்தர்ப்பங்களில், காயமடைந்த குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டியுள்ளது.

இது பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குப் பெரும் இடையூறாக உள்ளது. இது குறித்து அந்தப் பகுதிக் கிராம அதிகாரிகளுக்கும், வனவிலங்கு அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரை தீர்வு காணப்படவில்லை என்று பாட சாலை அதிபர் எஸ். ஜெஸ்டின் தெரி வித்துள்ளார்.



# மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் விபத்து!

(பழுவூரான்)

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செட்டிபாளையம் பகுதியில் இன்று வியாழக்கிழமை (26) அதிகாலை வாகன விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் கல் முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி காய்கறிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த டிப்பர் வாகனம் செட்டி பாளையத்தில் வீதியை விட்டு விலகி தொலைத் தொடர்பு வலைமைப்பின் கொங்கிரீட் தூணுடன் மோதி விபத்துக் குள்ளானது.

இதன்போது டிப்பர் வாகனத்தில் இருவர் பயணித்துள்ளனர். எனினும் எவருக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. வாகனத்தின் முன்பகுதி சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# சுகாதார மேம்பாட்டு வேலைத்தளமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள்

## மாற்றுதல் தொடர்பாகத் தெளிவூட்டும் நிகழ்வு

(றியாஸ் ஆதம்)

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களை சுகாதார மேம்பாட்டு வேலைத் தளமாக மாற்றுதல் தொடர்பாக துறைசார்ந்த உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் நிகழ்வு நேற்று புதன் கிழமை (25) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம் பெற்றது.

சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் இதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்கியுள்ளார்.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ தாதியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச செயலக உற்பத்தித் திறன் மேம்பாட்டு அலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பிராந்திய தாய், சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், தொற்றா நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத், பிராந்திய உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் என்.அருந்திரன், பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஹபீப் முகம்மட், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ தாதிய உத்தியோகத்தர் திருமதி கே.சௌந்தரராஜா ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம். பைறூஸின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# மட்டக்களப்பு மாவட்ட வினாடி வினா; புனித மிக்கேல் கல்லூரி முதலிடம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தால் மூன்றாவது தடவையாக நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களை சேர்ந்த 24 பாடசாலைகளில் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களிடையே இந்த வினாடி வினாப் போட்டி இடம்பெற்றது.

இதில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் உயர்தர வர்த்தகப் பிரிவைச் சேர்ந்த (2024 ) மாணவர்களான கே.துவிச்சன் , ஆர்.மிதுசான், ரீ.அபிச்சரிசன், ஆர்.தாட்சயன் ஆகிய மாணவர்கள் பங்கு கொண்டு கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

பரிசளிப்பு நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் கலந்து கொண்டார்.

# வடக்கு மாகாண புதிய ஆளுநருக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்து!

வடக்கு மாகாணப் புதிய ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகத்துக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

9 ஆளவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, முன்னாள் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகத்தை வடக்கு மாகாண ஆளுநராக நியமனம் செய்துள்ளார்.

இதனை முன்னிட்டு வடமாகாண ஆளுநருக்கு சர்வதேச இந்து மத பீடம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிக்கிறது என்று அதன் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

அரச அதிபராக அவர் பதவி வகித்த காலத்தில் மிகுந்த நேர்மையாகவும் மக்களுக்கு அர்ப்பணிப்புமிக்க சேவையிலும் ஈடுபட்டவர் என்பது தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அவரது அந்த உண்மையான உழைப்புக்கும் நேர்மைக்கும் இந்த ஆளுநர் பதவி கிடைத்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

அவரது சேவை தொடர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டும்



என்று அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





# நிரந்தர வைத்திய அத்தியட்சகராகக் கடமையேற்பு!

(அபு அலா )

கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுள் வேத வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றி வந்த வைத்தியர் எம்.நிரஞ்சன் நிரந்தர வைத்திய அத்தியட்சகராக நியமனம் பெற்று அவர், தனது கடமையை நேற்று (25) உத்தியோக பூர்வமாகப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றி வந்த சிரேஷ்ட தரம் 1 ஐச் சேர்ந்த ஆயுள் வேத வைத்தியர்களுக்கான நேர்முகத் தேர்வு அன்மையில் கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்டது.

அந்தத் தேர்வில் வைத்தியர் எம். நிரஞ்சன் சித்தியடைந்து அவர் கடமை யாற்றும் வைத்தியசாலைக்கே நிரந்தர வைத்திய அத்தியட்சகராக நியமிக் கப்பட்டுள்ளார்.

வைத்திய கலாநிதி செ.போல்ரன் றஜீவ் தலைமையில் இடம்பெற்ற கடமை யேற்பு நிகழ்வில் வைத்தியர் என்.பி. மோகனச்சந்திரன், பயிற்சி வைத்தி யர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண் டனர். வைத்திய கலாநிதி செ.போல்ரன் றஜீவால் பொன்னாடை போர்த்தி கௌர விக்கப்பட்டார்.



# மாணவர்களை வேலைக்கு அமர்த்திய பிரதி அதிபர் தொடர்பில் முறைப்பாடு!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

பிரதி அதிபர் ஒருவர் தனது வீட்டுக்கு 08 மாணவர்களை வேலைக்கு அமர்த்திய சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்திலும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹட்டன் கல்வி வலையத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ பிரதேச பாடசாலை ஒன்றில் தரம் 07 ஐச் சேர்ந்த 08 மாணவர்களைப் பிரதி அதிபர் ஒருவர் வேலைக்கு அமர்த்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொகவந்தலாவ பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த சம்பவம் தொடர்பாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையிலும் மாணவர்களின் பெற்றோர்கள் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக நேற்று (25) புதன்கிழமை மாலை முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அந்த 08 மாணவர்களையும் பிரதி அதிபர் பாடசாலை நிறைவடைந்தவுடன் பாடசாலை சீருடையுடன் அழைத்துச் சென்று இந்த விடுதியில் உள்ள வேலைகளை செய்யுமாறு பணிப்புரை விடுத்தமையால் அந்த மாணவர்கள் பிரதி அதிபரின் விடுதியினை சுத்தி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

தொடர்சியாக குறித்த பிரதி அதிபரின் வீட்டுக்கு தொழிலாளர்கலாக அமரத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாளும் இந்த மாணவர்கள் தமது வீடுகளுக்கு நான்கு மணியவில் வரும் நிலையில் பெற்றோர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்தே அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பது டிதரிய வந்துள்ளது என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் அறிந்த பெற்றோர்கள் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 119 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 36 வருட கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் சகாதேவராஜா!

36 வருட கால கல்விச் சேவையில் இருந்து சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா நாளை (27) வெள்ளிக்கிழமை ஓய்வு பெறுகிறார்.

சம்மாந்துறை வலயத்தில் 26 வருடங்களாக மேலாக சேவையாற்றி வெள்ளி விழாக் கண்ட ஒரே ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளரும், சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தின் தலைவருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா காரைதீவைச் சேர்ந்தவராவார்.

இவர் பத்து வருடங்கள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் 26 வருடங்கள் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையில் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

நாளை மறுநாள் சனிக்கிழமை இவரது அறுபதாவது அகவை தினமாகும். பேராதனை பல்கலைக்கழக கலைத்துறை பட்டதாரியான இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராவார். பட்டப்பின் கல்வி டிப்ளோமோ மற்றும் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றவராவார்.



இலங்கை அதிபர் சேவையின் முதல்தர அதிபராவார். கல்வி சமய சமூக பொருளாதார ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்.





# மட்டக்களப்பு - ஏறாவூர் பற்று - செங்கலடி விவசாய பெரும்போக ஆரம்பக் கூட்டம்!

(பழுவூரான்)

ஏறாவூர் பற்று – செங்கலடி பிரதேச செயலர் பிரிவுக்கான விவசாயப் பெரும்போக ஆரம்பக் கூட்டம் நேற்று புதன்கிழமை (25) பிற்பகல் செங்கலடி பிரதேச மாநாடு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், செங்கலடிப் பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், மட்டக்களப்பு மாவட்ட மத்தி நீர்ப்பாசன பணிப்பாளர், மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய ஆணையாளர், பிரதி விவசாயப் பணிப்பாளர், செங்கலடி உறுகாமம் நீர்ப்பாசனப் பொறியியலாளர், வனவிலங்கு திணைக்கள உத்தியோகத்தர்கள், வன பரிபாலன சபை திணைக்கள உத்தியோகத்தர்கள், நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், காப்புறுதி நிறுவன உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் தலைவர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் பெரும்போக பயிர்ச் செய்கைக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள், விதைப்பு, குளங்கள் நீர்ப்பாசன வேலைகள், உரம் வழங்கல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆரா யப்பட்டது.

அத்தோடு இன்றைய கூட்டத்தில் குறிப்பாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மரக்கடத்தலுக்கு துணை போவதாகவும், அப்பாவி மக்கள் விறகு வெட்டினால் நீதிமன்றம் செல்வதாகவும் விவசாயிகளால் குற்றம் சாட்டப்பட்டது.



# விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளராக மீண்டும் மகேசன்!

## 14 செயலாளர்களில் ஒரேயொரு தமிழ் அதிகாரி

( வி.ரி.சகாதேவராஜா)

பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராகக் கணபதிப்பிள்ளை மகேசன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்கவால் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய 14 அமைச்சுக்களின் செயலாளர்களுள் ஒரேயொரு மூத்த தமிழ் உயரதிகாரி மகேசன் ஆவார்.

மட்டக்களப்பு வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் காரைதீவில் திருமணம் செய்தவராவார். வாழைச்சேனை விஷ வைத்தியர் கணபதிப்பிள்ளை – பொன்னம்மா தம்பதியினரின் பத்தாவது மகன் மகேசன் ஆவார். வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் பயின்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்தையும் சர்வதேச வணிகத்தில் எம்.பி.ஏ. பட்டத்தையும் (ஆசிய தொழில்நுட்ப நிறுவனம்– தாய்லாந்து), எல்.எல்.பி. (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்), சர்வதேச உறவுகளில் பி.ஜி.டி. பட்டத்தையும் பெற்றவராவார்.



# மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய மட்ட ரெனிஸில் சம்பியனானது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை பாடசாலைகள் ரெனிஸ் சங்கம் நடத்திய 13 வயதுக்கு உட்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய ரெனிஸ் சுற்றுப் போடியில் ஆண்களுக்கான பிரிவில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வெற்றி வாகை சூடி சம்பியனைத் தனதாக்கியது. புனித மிக்கேல் அணியினர் இலங்கையின் பிரபல பாடசாலைகளான கொழும்பு ரோயல் கல்லூரி , கொழும்பு ஸாஹிராக் கல்லூரி, காலி ரிச்மென்ட் கல்லூரி என்பவற்றை முதல் சுற்றில் வென்று, அரை இறுதியில் கொழும்பு தேஸ்டன் கல்லூரியை வென்று, இறுதி போட்டியில் குருநாகல் மலிய தேவ கல் லூரியை வென்று சம்பியனைத் தனதாக்கி கொண்டது.



## தமிழக மீனவர்களை மிரட்ட

# துப்பாக்கிச்சூடு!

### நடுக்கடலில் இலங்கை இராணுவம் அட்டகாசம்
### படகுகளுள் பாய்ந்து மீனவர்கள் மீது தாக்குதல்
### மீன்பிடி சாதனங்களை அடித்து நொருக்கினர்

தமிழக மீனவர்களை அச்சுறுத்த இலங்கைக் கடற்படையினர் வானத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தி உள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சுமார் 300க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர். கச்சத்தீவு அருகே ஆழ்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களின் படகுகளில் ஏறி அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் படகுகளில் இருந்த மீன்பிடி சாதனங்களையும் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

மேலும் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மீனவர்களை விரட்டியடித்துள்ளனர். இதனால் அச்சமடைந்த மீனவர்கள் விரைந்து கரைக்குத் திரும்பினர். இதுவரை இல்லாத அளவிற்கு அதிகபடியான ரோந்துக் கப்பலில் இலங்கைக் கடற்படையினர் வந்தனர் என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அட்டூழியத்தால் ஒரு படகிற்கு 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனவும் மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தமிழக மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இலங்கைக் கடற்படையினரின் இந்த நடவடிக்கைக்கு மத்திய மாநில அரசுகள் நிரந்தர தீர்வு காண வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# முதல்வருக்கு நன்றி தெரிவித்த கமல்!

சென்னையில் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் வசித்த பகுதி வீதிக்கு அவரது பெயர் சூட்டிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது எக்ஸ் தள பதிவில்,

“ஒப்பற்ற இசைக் கலைஞரும் எனது மூத்த சகோதரருமான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பெயரை, சென்னையில் அவர் வாழ்ந்த தெருவிற்குச் சூட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

இலட்சக்கணக்கான கலை ஆர்வலர்களின் மனதில் இன்றும் வாழும் ஒரு பெரும் கலைஞனுக்குச் செய்யப்பட்டிருக்கும் மரியாதை இது.

பாலு அண்ணாவின் ரசிகர் கூட்டத்தில் ஒருவனாக என் பாராட்டுகளும் நன்றியறிதல்களும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உரித்தாகட்டும்” என்று தெரிவித்துள்ளார்.




## தமிழக வெற்றிக் கழக முதல் மாநாட்டுக்கு

# அனுமதி!

## 33 நிபந்தனைகளை மீள ஞாபகப்படுத்தியது பொலிஸ்

## அவற்றுள் 17ஐ கட்டாயம் நடைமுறைப்படுத்த அறிவுறுத்தல்

விஜய்யின் தமிழக வெற்றிக் கழக முதல் மாநாட்டுக்கு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 33 நிபந்தனைகளைச் சுட்டிக்காட்டி அவற்றுள் 17 நிபந்தனைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என விழுப்புரம் மாவட்ட பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விஜயின் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் அரசியல் மாநாடு அடுத்த மாதம் 27ஆம் திகதி விக்கிரவாண்டியில் நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டை நடத்துவதற்காகக் கட்சி சார்பில் அனுமதி கோரப்பட்டிருந்த நிலையில், தற்போது விழுப்புரம் மாவட்ட பொலிஸ் விக்கிரவாண்டியில் மாநாடு நடத்துவதற்காக அனுமதியை வழங்கியுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட 33 நிபந்தனைகளை மீண்டும் சுட்டிக்காட்டி, பொலிஸ் இந்த அனுமதியை வழங்கியுள்ளது. மேலும் 33 நிபந்தனைகளில் 17 நிபந்தனைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக மாநாட்டிற்கு மது அருந்தி வரக்கூடாது உள்ளிட்ட நெறிமுறைகளைத் தொண்டர்களுக்கு விஜய் அறிக்கை வெளியிட்டு வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# எச்சரிக்கை!

## அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்து பரிசீலனை

## மேற்கு நாடுகளின் அச்சுறுத்தலால் ரஷ்யா அதிரடி அறிவிப்பு

## 1,572 அணு ஆயுதங்கள் ஏவுகணைகளில் பொருத்தப்பட்டு தயார்

"மேற்கு நாடுகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமையால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்த பரிசீலனையில் ரஷ்யா இறங்கியுள்ளது" என ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு தொடங்கிய ரஷ்ய – உக்ரைன் போர் இரண்டு ஆண்டுகளைக் கடந்த நீடித்து வருகிறது. மேற்கு நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோக் கூட்டமைப்பில் சேர உக்ரைன் முயற்சித்தமையால் தங்களுக்கு ஆபத்து என்று கூறி ரஷ்யா இந்தப் போரைத் தொடங்கியது.

ரஷ்யா பக்கம் வட கொரியா, சீனா உள்ளிட்ட நாடுகள் உள்ளன. போரில் உக்ரைனுக்குப் பக்க பலமாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஆயுத மற்றும் பொருளாதார ரீதியாக உதவி வருகின்றன.

உக்ரைனுக்கு பிரிட்டன் ஸ்டார்ம் ஷேடோ என்ற அதிநவீன ஏவுகணைகளை வழங்கியுள்ளது. இதை ரஷ்யா மீது உக்ரைன் பயன்படுத்தும்பட்சத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு புடின் ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில்தான் இந்த ஒட்டுமொத்த போரானது எந்நேரமும் மூன்றாம் உலகப் போருக்கு இட்டுச் செல்லும் என்று நிலவி வரும் அச்சத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் ரஷ்ய அதிபர் புடின் முடிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இன்று தொலைக்காட்சி வாயிலாக பேசிய புடின், "அதிகரித்து வரும் சர்வதேச பாதுகாப்பு அச்சறுத்தல் காரணமாக ரஷ்யாவின், அணு ஆயுதங்கள் பயன்பாடு (பயன்படுத்தாமல் இருப்பது உள்ளிட்ட கொள்கைகளில்) குறித்த திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது.

சர்வதேச இராணுவ மற்றும் அரசியல் சூழல் தொடர்ச்சியாக மாறி வருகிறது, அதற்கு ஏற்ற முடிவுகளை நாம் எடுத்தாக வேண்டும். நமக்கும் நமது நேச நாடுகளுக்கும் உருவாகியுள்ள புதிய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் ரஷ்ய இராணுவத் தளபதிகளுடனான கூட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகள் உக்ரைனுக்கு உதவி வருவதால் உக்ரைன், ரஷ்யாவை எதிர்ப்பது என்பது, உக்ரைன் வழியாக அதற்கு உதவும் நாடுகள் நேரடியாக ரஷ்யாவை எதிர்ப்பதாகக் கருதப்படும்.

எனவே தாங்களும் தங்களின் அணு ஆயுதங்களை உபயோகிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்ற வகையில் புடின் பேசியுள்ளார். இது மேற்கத்தைய நாடுகளிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவிடம் 6 ஆயிரத்து 732 அணு ஆயுதங்கள் உள்ளன. இதில், ஆயிரத்து 572 அணு ஆயுதங்கள் ஏவுகணைகளில் பொருத்தப்பட்டு முக்கிய இடங்களில் எந்நேரமும் தாக்குதலுக்குத் தயார் நிலையில் உள்ளன எனக் கூறப்படுகிறது.



கனடா முரசு

பக்கங்கள் 05

வியாழக்கிழமை 26/09/2024

## லெபனான் வன்முறைகளில் கனடியத் தம்பதியர் மரணம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 26

லெபனானில் அதிகரித்து வரும் வன்முறையில் குறைந்தது இரண்டு கனேடியர்கள் இறந்துள்ளனர்.

இந்த சம்பவமானது 02



# சிறுபான்மை லிபரல் கட்சி அரசாங்கம் நேற்று நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தப்பியது!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 26

சிறுபான்மை லிபரல் அரசாங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இருந்து தப்பியது. ஆனால் பிரதம மந்திரி கிறிஸ்துமஸ்க்கு முன் தேர்தலைத் தவிர்க்க விரும்பினால், அடுத்த மாத இறுதிக்குள் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று புளொக் கியூபெக்குவா தலைவர் கூறினார்.

02

# ஹெய்ட்டியில் வளர்ந்த சிவில் பொறியியலாளர் கியூபெக்கின் அடுத்த செனட்டராக நியமனம்

கியூபெக், செப்ரம்பர் 26

ஹெய்ட்டியில் வளர்ந்த சிவில் பொறியியலாளர் ஒருவரை கியூபெக்கின் அடுத்த செனட்டராகப் பிரதமர் ஜஸ்டின் ட்ஷரூடோ அறிவித்துள்ளார்.

சுசே யூன்ஸ் செனட் சபையில் சுயேச்சையாக அமர்வார்.

அவர் 2006 இல் ஹெய்ட்டியில் இருந்து கனடாவிற்கு குடிபெயர்ந்தார். போர்ட்-ஓ-பிரின்ஸை அடிப்படையாகக் கொண்ட கனேடிய உதவித் திட்டங்களில் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக செலவிட்டார்.

குடும்பம், கல்வி, குடியேற்றம் மற்றும் பிற ஆதரவை வழங்கும் மாண்ட்ரீலில் உள்ள ஹெய்ட்டியின் சமூக அலுவலகத்தின் தலைவராகவும் அவர் உள்ளார்.





# 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசரின் மண்டை ஓடு கண்டுபிடிப்பு!

## அல்பேர்ட்டாவின் பேட்லாண்ட்ஸில் ஆய்வாளர்கள் நடவடிக்கை

அல்பேர்ட்டா, செப்ரம்பர் 26

அல்பேர்ட்டாவின் பேட்லாண்ட்ஸில் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் சுற்றித் திரிந்த டைனோசர் ஒன்றின் எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

கிராண்டே ப்ரேரிக்கு அருகிலுள்ள பழங்கால ஆராய்ச்சியாளர்கள் அதன் 272 கிலோகிராம் மண்டை ஓட்டைக் கண்டெடுத்துள்ளனர்.

அவர்கள் அதை 'பிக் சாம்' என்று அழைக்கிறார்கள்.

இப்போது எட்மண்டனில் இருந்து வடமேற்கே 450 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கின் விளிம்பில் ஒன்றாக இறந்த ஒரு கூட்டத்தைச் சேர்ந்த டைனோசர்களின் அடர்த்தியான எலும்புப் படுக்கையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட - தாவரத்தை உண்ணும் - இரண்டாவது டைனோசர் வகையான இதனை பச்சிரினோசொரஸ் என அழைக்கின்றனர்.

இந்த டைனோசரின் தலை மட்டும் குட்டி யானை அளவு இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு ஓர் உயர்நிலைப் பாடசாலை ஆசிரியை ஒரு நடைப்பயணத்தின் போது முதன்முதலில் இந்த எலும்புப் படுக்கையைக் கண்டுபிடித்தார்.

## சிறுபான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புளொக் கியூபெக்குவா தலைவர் மற்றும் அவரது நாடாளுமன்ற உறுப்பினர்கள், லிபரல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து கன்சர்வேட்டிவ் கட்சியினரின் நம்பிக்கையில்லாப் பிரேரணக்கு எதிராக வாக்களித்தனர்.

இதனால் இந்தப் பிரேரணை 211-120 என்ற கணக்கில் தோல்வியடைந்தது.

மூத்தவர்களுக்கு முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத்தை அதிகரிக்கும் சட்ட மூலம் மற்றும் சர்வதேச வர்த்தக பேச்சுவார்த்தைகளின் போது கனடாவின் விநியோக மேலாண்மை அமைப்பை பாதுகாக்க முயலும் சட்டமூலம் ஆகியவற்றுக்கு லிபரல் அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும் என்பதே புளொக் கியூபெக்குவா கட்சியின் கோரிக்கையாகும்.

இந்த கோரிக்கைகளுக்குத் தாம் எவ்வாறு பதிலளிப்பார்கள் என்று லிபரல்கள் கூறவில்லை.

## லெபனான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனேடிய குடிமக்களை லெபனான் நாட்டிலிருந்து அரசாங்கம் வெளியேற்ற வேண்டும் என்று அழைப்பு விடுக்க வழி வகுத்தது.

வெளியுறவு அமைச்சர் மெலானி ஜோலி, சமூக ஊடக தளமான எக்ஸில் ஒரு பதிவில் இறந்த கணவன் மற்றும் மனைவியின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.

'வான்வழித் தாக்குதலில் ஹுசைன் மற்றும் தாத் தபாஜா கொல்லப்பட்டமைக்கு ஆழ்ந்த வருத்தம்' என்று அவர் பதிவிட்டுள்ளார்.

துக்கத்தில் இருக்கும் குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும், காயங்களுடன் உதவிக்கு வந்த மற்றொரு கனேடியருக்கு உதவுவதாகவும் வெளியுறவு அமைச்சு நேற்று தெரிவித்தது.






# இணைய வழியிலான தவறான தகவல்களை எதிர்கொள்ளும் திறன் குறைந்து வருகிறது!

## அலாரம் ஒலிக்கின்றது வெளியுறவு அமைச்சகம்

தரவுகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் எதிரிகளின் வளர்ந்து வரும் தந்திரோபாயங்கள் காரணமாக இணையத்தில் வெளிநாட்டு தவறான தகவல்களை எதிர்கொள்ளும் திறன் குறைந்து வருவதாக கனடிய வெளியுறவு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

திறந்த மூல தரவு பகுப்பாய்வு மூலம் ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல்களை அடையாளம் காணவும் பதிலளிக்கவும் கனடா ஜி7 விரைவான பதில் பொறிமுறையை வழி நடத்தியது என வெளிநாட்டு தலையீடு குறித்த மத்திய அரசாங்கத்தின் விசாரணையில் புதன்கிழமை தாக்கல் செய்யப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக ஊடக தளங்களின் சேவை விதிமுறைகள் மற்றும் அவற்றின் யுPஐகளுக்கான அணுகல் குறித்த முடிவெடுப்பது வணிக முடிவுகள், அவை தேசிய பாதுகாப்பு அல்லது தேசிய நலனை கருத்தில் கொள்ள வேண்டிய தில்லை என இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முன்னாள் அமைச்சரும் செனட்டருமான பிரான்சிஸ் ஃபாக்ஸ் 84 வயதில் மறைவு

ஒட்டாவா, செப்ரம்பர் 26

பியர் எலியட் ட்ரூடோவின் அரசாங்கத்தில் முன்னாள் செனட்டரும் அமைச்சரவை அமைச்சருமான பிரான்சிஸ் ஃபாக்ஸ் 84 வயதில் காலமானார்.

ஃபாக்ஸ் ஒரு வழக்கறிஞர் ஆவார், அவர் 1972 இல் கியூபெக்கில் நாடாளுமன்ற உறுப்பினராக முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஃபாக்ஸ் ட்ரூடோவின் தந்தையின் கீழ் சொலிசிட்டர் ஜெனரல், தகவல் தொடர்பு அமைச்சர் மற்றும் கனடாவின் வெளியுறவுத்துறை செயலாளராக பணியாற்றினார்.

12 ஆண்டுகள் நாடாளுமன்றத்தில் பணியாற்றிய அவரது பங்களிப்புகளில் முக்கிய தகவல் அணுகல் சட்டத்தை அறிமுகப்படுத்தியது மற்றும் டெலிஃபிலிம் கனடாவை உருவாக்குவதை மேற்பார்வையிட்டது ஆகியவை அடங்கும் என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார். 1980 ஆம் ஆண்டு ஓ கனடாவை அதிகாரப்பூர்வமாக தேசிய கீதமாக மாற்றும் சட்டத்தையும் அவர் அறி முகப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்திய மாணவரின் விண்ணப்பங்களை கனடா உன்னிப்பாகப் பரிசீலிக்கின்றது

## குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தகவல்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 26

இந்தியாவில் இருந்து வரும் மாணவர் விண்ணப் பங்களை உன்னிப்பாக பரிசீலித்து வருவதாக குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்தார்.

கனடாவுக்கு வர விரும்புபவர்கள், மாணவர் விசா விண்ணப்பங்களைத் தவறாகப் பயன்படுத்துவதை தடுக்கும் நடவடிக்கையை கனடா செயல்படுத்துகிறது என அமைச்சர் கூறினார்.

கனடாவுக்கு வரும் மக்களின் எதிர்பார்ப்பு ஏற்ப கோடை முழுவதும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதா கவும் அவர் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் அனுமதியில் கனடாவிற்குள் வருபவர்கள், அதன் மூலம் புகலிடம் கோருவது அல்லது அமெரிக்காவிற்குள் நுழைய முனைவது போன்ற நகர்வுகள் தடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

இந்தியாவில் இருந்து பெறப்படும் விசா விண்ணப்பங்கள் எதிர்காலத்தில் கூடுதல் ஆய்வுகளை எதிர்கொள்ள நேரிடும் எனவும் மார்க் மில்லர் கூறினார்.

இந்தியாவில் இருந்து மாணவர் விசா விண்ணப்பத்தில் கனடாவிற்குள் வரும் பலரும் இங்கு அகதி தஞ்சம் கோரும் நிலை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித் தார்.



# கனடாவின் சனத்தொகை அதிகரிப்பு; இரண்டாம் காலாண்டில் 0.6 வீத உயர்வு

கனடாவில் சனத்தொகை அதிக ரிப்பு தொடர்பில் தகவல்கள் வெளியா கியுள்ளன.

நாட்டின் மொத்த சனத்தொகை 41,288,599 மாக பதிவாகியுள்ளது. கன டிய புள்ளிவிவரவியல் திணைக்களம் இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இரண்டாம் காலாண்டு பகுதியில் நாட்டின் சனத்தொகை 250,229ல் அதிக ரித்துள்ளது. இது 0.6 வீத அதிகரிப்பாகும்.

கடந்த 2023ம் ஆண்டு இரண்டாம் காலாண்டு பகுதியில் சனத்தொகை வளர்ச்சியானது 0.8 வீதமாக அதிகரித் திருந்தது.

நாட்டில் பிறப்பு மற்றும் இறப்புக்க ளுக்கு இடையிலான வித்தியாசம் 9,926 எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் வேகமாக சனத்தொகை வளர்ச்சி பதிவான மாகாணமாக அல்பர்ட்டா காணப்படுகின்றது.



# வீட்டில் நடக்கும் பார்ட்டியால் அயலவர்களுக்குத் தொல்லை

கனடாவின் ஒன்றாறியோ மாகாணத்தில், வீடொன்றிற்கு பஸ்களில் வரிசையாக இளம்பெண்கள் வந்திறங்குகிறார்கள்.

அவர்கள் நடத்தும் பார்ட்டியால் வீடுகளில் பிள்ளைகளுடன் நிம்மதியாக இருக்க முடியவில்லை என அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் புகார் தெரிவித்துள்ளார்கள்.

ஒன்றாறியோ மாகாணத்திலுள்ள லண்டன் நகரில் அமைந்துள்ள வீடொன்றிற்கு கடந்த சனிக்கிழமை பஸ்கள் வரிசையாக வந்துள்ளன.

அந்த பஸ்களிலிருந்து இளம் பெண்கள் இறங்கி அந்த வீட்டுக்குச் சென்றுள்ளார்கள்.

வாடகைக்கு விடப்பட்டுள்ள அந்த வீட்டில், அந்த இளம்பெண்கள் ஆட்டமும் பாட்டுமாக பார்ட்டி கொண்டாட, அக்கம்பக்கத்தில் குடும்பத்துடன் வாழும் மக்கள் சத்தத்தால் அவதியுற்று வருகின்றனர் என அந்த பகுதியில் வாழும் Marion Warren என்பவர் தெரிவிக்கிறார்.

வார இறுதியில் கூட்டம் கூட்டமாக இளம்பெண்கள் வந்திறங்க, அந்த தெரு முழுவதுமே பெண்களால் நிறைந்திருந்ததாக தெரிவிக்கிறார் அவர்.

அவர்கள் எழுப்பும் சத்தம், வீட்டு படுக்கையறை வரை கேட்பதாகவும், தூங்க இயலவில்லை என்றும் கூறுகிறார் அவர்.

இதற்கிடையில், அந்த வீட்டின் உரிமையாளர் அந்த வீட்டைத் தாமே வாடகைக்கு விட்டுள்ளார் எனவும், ஆனால் அங்கு இப்படிக் கூட்டம் கூட்டமாக பெண்கள் வருவார்கள் என்பது தனக்குத் தெரியாது என்றும் கூறியுள்ளார்.

அதிகாரிகள் அந்த விடயம் தொடர்பில் விசாரணை ஒன்றைத் துவக்கியுள்ளார்கள்.



# றொறன்ரோவில் முதியவர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் மோசடிச் செயற்பாடுகள்

கனடாவின் றொறன்ரோ பகுதியில் முதியவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் மோசடிச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இரண்டு சந்தேக நபர்கள் இவ்வாறு முதியவர்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

றொறன்ரோ பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரிடமிருந்து அண்மையில் 6,000 டொலர் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் யோர்க் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி தங்களது பேரப்பிள்ளைகள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பிணையில் விடுவிக்க பணம் செலுத்த வேண்டும் எனவும் கூறி முதியவர்களிடமிருந்து பணம் பறிக்கப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தொலைபேசி அழைப்புகளோ, அல்லது வேறு வழியிலான தகவல்களோ கிடைக்கப்பெற்றால் அவற்றை நன்கு ஆராய்ந்து அதன் பின்னர் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பிரம்டனைச் சேர்ந்த 20 வயதான ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.